

Madurai Symposium 2007

Advancing Development

Building Alliances

24-29 September



---

செய்தியறிக்கை

செப்டம்பர் 25, 2007

## சுத்தமான குடிநீர் விழிப்புணர்விற்காக பள்ளி கல்லூரிகளில் மாணவர் குழுக்கள்

மதுரை கூடலரங்கம் 2007 நிகழ்வில் இளைஞர்களுக்கான திட்டங்களின் வாயிலாக தூய குடிநீர் விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று நடைபெற்றது. அதில் தியாகராசர் பொறியியற் கல்லூரி, அருளானந்தர் கல்லூரி, டோக் பெருமாட்டிக் கல்லூரி, மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் சோழவந்தான், சத்திரப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளிகள், டி.வி.எஸ்.மேல்நிலைப்பள்ளி, வெள்ளிவீதியார் மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மதுரை விருதுநகர் நாடார் உறவின்முறை பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலிருந்து மாணவ, மாணவிகள் இதில் பங்கேற்றனர். மதுரை மாநகருக்குள் வீணாகும் கழிவு நீரை முறையாகச் சுத்திகரிப்புச் செய்து மறுபயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்த முடியும் என்பதை தியாகராசர் பொறியியற் கல்லூரியின் பொதுவியல் துறைப் பேராசிரியர் சந்திரன் விளக்கிப் பேசினார். மேலும் அவர் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத பிரெஞ்ச் வடிகால் முறை மதுரை மாநகரில்தான் உள்ளது. அதன் சிறப்பான செயல்பாட்டுத் தரம் தற்போது குறைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மதுரை மாநகரின் தண்ணீர்ப் பிரச்சனைகள் குறித்து தானம் அறக்கட்டளையின் அணித்தலைவர் கனகவல்லி பேசும்போது, பெருகி வரும் மக்கள் தொகையின் காரணமாய் மதுரை மாநகர் கடுமையான குடிநீர்த் தட்டுப்பாட்டை எதிர் கொள்ளவிருப்பதோடு, நிலத்தடி நீர் மாசுபாடும் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. மதுரை மாநகரின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பெறக்கூடிய நிலத்தடி நீர் 70 விழுக்காடு குடிப்பதற்கு உகந்ததாயில்லை என்பது வேதனைக்குரியது. பொதுமக்கள் தாங்கள் பெறக்கூடிய குடிநீரை செலவின்றியும் அதே சமயத்தில் சுகாதாரமானதாகவும் பெறவேண்டிய விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்த வேண்டும்' என்றார். கழிவுநீர் மறுசுழற்சி குறித்து ஜெர்மனியைச் சார்ந்த நீரியல் வல்லுநர் ஜென்ஸ் கூட்டன்பெர்க் மாணவர்களிடம் விளக்கிப் பேசினார். பல்வேறு பள்ளி, கல்லூரி மாணவர்களைக் கொண்ட செயல்பாட்டுக்குழு அமைக்க இக்கருத்தரங்கு முடிவு செய்தது. முதன்மைக் கல்வி அலுவலர் பாண்டுரங்கன் பள்ளிகளில் சுகாதாரமான குடிநீர் விழிப்புணர்வை மையப்படுத்திய மாணவர் குழுக்களை உருவாக்க உறுதியளித்தார்.

மேற்காணும் செய்தியறிக்கையை தங்கள் நாளிதழில் வெளியிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

தங்களன்புள்ள

இரா.சிவக்குமார்
ஊடக ஒருங்கிணைப்பாளர்
தானம் அறக்கட்டளை